1980 பிப்ரவரி 5]

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லக் கூடிய பதிலில் முரண்பாடு இருக்கிறது என்று தெரியும். நெரிசல் குறைய வேண்டும் என்று சொன்னால் கிராமங்களிலே அந்தத் தொழில்களை அமைத்தால்தான் அந்தந்த கிராமத்திலே இருக்கின்ற மக்களுக்கு வேலைவாய்ப்புக்களைத் தர முடியும். பஸ்ஸின் மூலம் கொண்டு வரும்போது நடந்த விபத்துக்கள் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். எனவே, ஆங்காங்கே சிறு சிறு தொழில்களை அமைத்து பரவலாக வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் உரிமங்கள் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறோம். இப்போது தொழில் வைத்திருக்கக்கூடியவர்கள் தங்கள் தொழில் பாதிக்கப்படும் என்பதற்காக, புதிதாக லைசன்சு கொடுக்கக் கூடாது என்று சொல்லுவதாகத் தெரிகிறது. எனவே, சிறுசிறு தொழில்களுக்கு அனுமதி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, 5 கிலோ மீட்டருக்குள் கொடுக்கக் கூடாது என சொல்லும் போது, 5 கிலோ மீட்டருக்கு வெளியே கொடுக்கலாம் என்பதால், அப்படிக் கொடுக்கிறபோது, சுற்றுப்புறங்களில் புதிய தொழிற்சாலைகள் ஆங்காங்கே சிவகாசியை ஒட்டி நிறுவ முடியும். அதனால் 5 கிலோ மீட்டருக்கு வெளியே இருக்கும் சுற்றுப்புறங்கள் வளர்ச்சி அடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, அர்பான்சிங் கமிட்டியின் பரிந்துரைகள் என்னென்ன? அவற்றில் எந்தெந்த பரிந்துரைகள் இப்போது அமலாக்கப்பட்டு இருக்கின்றன. அதில் குறிப்பாக சிறுவர்களை வேலைக்கு வைத்துக்கொள்ளக் கூடாது என்ற பரிந்துரை அமலாக்கப்பட்டு வருகிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, அர்பான்சிங் கமிட்டியின் பரிந்துரைகளை அரசு கூடி ஒரு முடிவு எடுத்து இருக்கிறது. அவைகள் என்னென்ன என்பதைப் பற்றி தனிக் கேள்வி போட்டால் சொல்கிறேன்.

மேச்சேரி ஒன்றியத்திற்கு குடிநீர் வழங்கல்.

* வினா எண். 52—திரு. ரா. நாராயணன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியத்திற்கு மேட்டூர் அணையிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு .எஸ். இராகவானந்தம்: (அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையிலுள்ளது.

(ஆ) இத்திட்டத்திற்கான உத்தேச மதிப்பீடு வாரியத்தால் தயாரிக்கப்பட்ட பின்னர் அரசு ஒப்புதல் பெற்று திட்டம் நிறைவேற்றப்படும்.

திரு. ரா. நாராயணன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே மேய்ச்சேரி பேரூராட்சிக்கு தொப்பையாறு என்ற இடத்தில் இருந்து குடிநீர் வசதி செய்து கொடுக்க திட்டமிடப்பட்டது. பிறகு அந்த ஸ்கீம் சரியல்ல என்று கைவிடப்பட்டு, தற்போது மேட்டூரில் இருந்து மேய்ச்சேரிக்கு குடிநீர் வசதி செய்து கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்தத் திட்டத்தை மேய்ச்சேரி ஓமலூர் வரைக்கும் ஒரு பகுதியாக வைத்து, குடிநீர் வசதி செய்து கொடுக்க, தனித் திட்டமாக முதலில் நிறைவேற்றப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, மேய்ச்சேரி ஒன்றியத்தின் பொருளாதார நிலையை மனதில் கொண்டு, அந்த ஒன்றியத்திற்கு மட்டும் குடிநீர் திட்டம் கொண்டு வருவது ஒன்றியத்தின் நிதிநிலைக்கு ஒவ்வாது என்ற கருத்தின் அடிப்படையில் அந்த ஒன்றியம் கூட்டு குடிநீர் திட்டத்தில் சேர்க்கப்பட்டது. அதன் பேரில் மேட்டூருக்கு அருகில் காவேரி நீரை ஆதாரமாகக் கொண்டு, மேய்ச்சேரி, ஓமலூர், சூரமங்கலம், ஜாரிகொண்டலாம்பட்டி, சேலம், ஆத்தூர் மற்றும் இவற்றிற்கிடையே உள்ள வழியோர கிராமங்களுக்கும் சேர்த்து கூட்டு குடிநீர்த்திட்டம் ஒன்று தோராயமாக ரூ. 23.00 கோடி செலவில் உத்தேச மதிப்பீடு போட்டு, அது அரசுக்கு அனுப்பப்பட்டு, அரசின் நிர்வாக ஒப்புதல் பெற்ற பிறகு நிறைவேற்றப்படும் என்று தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் தெரிவித்துள்ளது.

திரு. ரா. நாராயணன்: தலைவர் அவர்களே, இந்த 23 கோடி ரூபாய் செலவிலான திட்டத்தை இரண்டு திட்டங்களாகப் பிரித்து ஓமலூர் வரை ஒரு திட்டமாக அதைச் செய்ய வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அதைச் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, பொருளாதார ரீதியில் அது சரியாக இருக்காது என்ற காரணத்தால்தான் கூட்டு குடிநீர் திட்டமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.